BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் புதுப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் மாஸ்டர் திட்டத்தை வெளியிடுகிறது

## இந்த திட்டத்தின்படி, ப்ராம்ப்ட்டன் நகரில் நிலைத்து நிற்கவல்ல மற்றும் வானிலை மாற்றத்திற்கான உயர் தாக்கம் கொண்ட 60 செயல்பாடுகள் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன.

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 25, 2021) – மார்ச் 24 ஆம் தேதியன்று ப்ராம்ப்ட்டன் நகர சபையானது, **ப்ராம்ப்ட்டன் க்ரோ க்ரீன்** சுற்றுச்சூழலுக்கான மாஸ்டர் திட்டத்தின் [Brampton Grow Green Environmental Master Plan (EMP)], புதுப்பித்தலுக்கு ஒருமுகமாக ஒப்புதல் வழங்கியது; இது இந்த நகரை பசுமை நகரமாக ஆக்குவதற்கான கடப்பாட்டின் மீது கட்டமைக்கப்படுகிறது.

இந்த மிகமுக்கியமான ஆவணத்தை புதுப்பிப்பது என்பது, ப்ராம்ப்ட்டன் நகரில் சுற்றுச்சூழல் பற்றிய வெற்றிகளை தனித்து எடுத்துக் காட்டுகிறது, என்பதுடன் EMP (சுற்றுச்சூழலுக்கான மாஸ்டர் திட்டம்) முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதில் இருந்து சுற்றுச்சூழலுக்கான முன்னுரிமை கொண்ட விஷயங்கள் எவ்வாறு உருவாகின என்பதை எடுத்தியம்புகிறது; இந்த இலக்குகளை முன்னெடுப்பதற்கு ஒரு புதுப்பிக்கப்பட்ட செயல் திட்டத்தையும் இது வழங்குகிறது. இந்த செயல் திட்டமானது, அடுத்த பத்து ஆண்டுகளில் ஒரு பசுமையான நகரத்தை உருவாக்குவதற்கான பாதையை அமைத்துக்கொடுக்கின்ற 60 உயர்-தாக்கம் உருவாக்குகின்ற நடவடிக்கைகளைக் கொண்டுள்ளது; இந்த செயலானது, ப்ராம்ப்ட்டன் நகரை இன்னமும் ஒரு ஆரோக்கியமான, நெகிழ்வான, மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான சமூகமாக ஆக்க முடுக்கி விடும்.

இந்த நடவடிக்கைகள் சமுதாய தோட்டம் அமைக்கும் திட்டங்களை விரிவுபடுத்துகின்றன, ஒரு நகர்ப்புற தேனீ வளர்ப்புக்கும் வழி வகுக்கிறது; இந்த நகரத்திற்கான ஒரு காலநிலை மாற்றத்தினைத் தழுவிக்கொள்ளும் திட்டத்தை நிறுவுதலும் மற்றும் நகர வசதிகளுக்கான நீர் திறன் உத்திகளை உருவாக்குதல் ஆகியவையும் இதில் அடங்கும்.

ஏற்கனவே நடந்துகொண்டிருக்கின்ற அடிப்படை வேலைகளின் மீது கட்டமைப்பு செய்யும் வகையில் , நகரமும் மற்றும் அதன் பணிகளில் பங்கேற்கின்றவர்களும், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மீதான நடவடிக்கை எடுக்கும் வகையில், குடியிருப்பாளர்கள், தொழில்கள் மற்றும் சமூக அமைப்புகளுக்கு கல்வி போதித்து அதிகாரமளிப்பும் வழங்குவார்கள்.

**பின்புலம்**

**ப்ராம்ப்ட்டன் க்ரோ கிரீன்** (Brampton Grow Green) EMP ஆனது, நகருக்குள்ளாகவும், சமூகத்திற்குள்ளாகவும் சுற்றுச்சூழலின் நிலைத்து நிற்கவல்ல தன்மையை மேம்படுத்துவதற்கென செய்யப்பட்ட ஒரு மாதிரி வரைபடமாகும். முதன் முதலாக 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட EMP யானது ஒரு தொலைநோக்குப் பார்வை, வழிகாட்டுதல் கோட்பாடுகள், இலக்குகள் மற்றும் செயல்களை கோடிட்டுக் காட்டுகிறது; இது இன்னும் நிலைத்திருக்கவல்ல எதிர்காலத்திற்காகவும், முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கான செயல்திறன் அளவீடுகள் மற்றும் இலக்குகள் ஆகியவற்றையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

ப்ராப்ட்டன் நகரின் சுற்றுச்சூழல் செயல்திறன், வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான பல நகரங்களின் திட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு EMP கிரியா ஊக்கியாக இருக்கிறது; மேலும் கிரேட்டர் டோரோன்ட்டோ மற்றும் ஹாமில்டன் பகுதியில், சுற்றுச்சூழல் பொருத்தவரையில் ஒரு தலைமையகமாக மாறியுள்ளது.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்டன் நகர சபையானது புதிய **ப்ராம்ப்ட்டன் க்ரோ க்ரீன்** (Brampton Grow Green ) எனும் சுற்றுச்சூழல் மாஸ்டர் திட்டத்திற்கு ஒருமனதாக ஒப்புதல் வழங்கியது. ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரம் ஆகும், மற்றும் நாங்கள் செய்யும் அனைத்து காரியங்களிலும் நகரசபையின் முன்னுரிமை கொண்ட விஷயங்கள் அனைத்திலும் இது பிரதிபலிப்பதை உறுதி செய்கிறது. புதுப்பிக்கப்பட்ட திட்டமானது, அடுத்த பத்தாண்டுகளில் ப்ராம்ப்ட்டன் நகரில் நிலைத்து நிற்கும் தன்மையை யுக்திரீதியாக முன்னெடுத்துச் செல்ல வைக்கின்ற ஒரு முக்கிய ஆவணம் ஆகும். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“புதிய **ப்ராம்ப்ட்டன் கரோ க்ரீன்** (Brampton Grow Green ) எனும் சுற்றுச்சூழல் மாஸ்டர் திட்டத்தை வெளியிடுவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். இது ப்ராம்ப்ட்டன் நகருக்கு நிலைத்து நிற்கவல்ல ஒரு எதிர்காலத்தை உறுதி செய்கின்ற, செயல்பாடு சார்ந்த திட்டமாகும்; இதில் ஒரு பெருநிறுவனம் (நகரம்) மற்றும் சமூகத்தின் மீது கவனம் செலுத்தும் வகையிலான, அதன் 60 உயர் தாக்க நடவடிக்கைகளை உள்ளடங்குகிறது. புதிய திட்டத்தில் என்னவெல்லாம் இருக்கின்றன என்று ஆராய அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன். "

- *பால் விசெண்ட், தலைவர், பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள்1 & 5, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“பராம்ப்ட்டனில் உருவாகின்ற கிரீன்ஹவுஸ் எரிவாயு உமிழ்வுகளை 2050 ஆம் ஆண்டு வாக்கில் 80 சதவீத அளவிற்கு குறைப்பதற்கான ஒரு பயணத்தில் நாம் இருக்கிறோம்; இந்த மேம்படுத்தப்பட்ட

ப்ராம்ப்ட்டன் க்ரோ க்ரீன் கிரீன் (Brampton Grow Green) எனும் சுற்றுச்சூழல் சார்ந்த மாஸ்டர் திட்டமானது இந்தப் பணிக்கு ஆதரவு தரும். சமூகத்தில் உண்மையான மாற்றம் செய்ய, நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கான தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை எங்கள் வசம் நாங்கள் கொண்டிருக்கிறோம். "

- *டக் வில்லான்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 2 & 6; உறுப்பினர், சுற்றுச்சூழல் ஆலோசனைக் குழு,* CEERP *சமுதாயப் பணிப்படை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“இந்த மேம்படுத்தப்பட்ட ப்ராம்ப்ட்டன் க்ரோ க்ரீன் (Brampton Grow Green) எனும் சுற்றுச்சூழல் சார்ந்த மாஸ்டர் திட்டம் மூலமாக, நிலைத்து நிற்கவல்ல மாற்றத்தை உருவாக்குவதற்கு நகரின் ஊழியர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். இந்த முக்கியமான செயல்திட்டத்தை செயல்படுத்த எங்கள் பங்காளிகளுடனும் நகர வளர்ச்சியில் பங்கெடுப்பவர்களுடனும் தொடர்ந்து பணியாற்றுவோம். "

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்..

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca